DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

Calender

Miscellaneous **CC. NO.323/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution அ.சா.2

Defence

Court

Name : பாரதி
Father/ Husband Name : சுப்பையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் சிறுவளியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலைபார்த்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 01.09.2023ம் தேதி மாலை 05.-06 மணியளவில் நானும், அ.சா.1 செல்வராஜீம் என் வீட்டில் பேசிகொண்டிருந்தோம். அப்போது எதிரியின் அத்தையை பற்றி பேசியதாக சொல்லி எதிரி அ.சா.1ன் தலையில் கம்பியால் அடித்தார். பின்னர் எதிரி கம்பை எடுத்து அ.சா.1ன் மூக்கில் அடித்தார். எதிரி மதுபோதையில் இருந்தார். பின்னர் எதிரி கம்பை அ.சா.1ன் முதுகில் நன்காக அடித்தார். கூ என சத்தம் கேட்டது. 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தேன். தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு மாரியப்பன் அழைத்துசென்றார். மறுநாள் ஆறாவயல் போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 என் வீட்டிற்கு சம்பவம் நடப்பதற்கு முன்பே மாலை 06.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்தார் என்றால் வந்தார் ஆனால் 05-05.45 மணியளவில் வந்தார். எதிரி அத்தையை பற்றி என்ன பேசினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1ன் தலையில் அடித்ததாக சொல்லப்படும் சம்பவம் எங்கு நடந்தது என்றால் என் வீட்டிற்கு வெளியில். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்போது நான் வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரியல்ல. கம்பி சுமார் 5அடி இருக்கும். எதிரியும் அ.சா.1ம் உறவினர்கள் என்றால் சரிதான்.

2. அ.சா.1க்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் அ.சா.1ஐ மருத்துவமனைக்கு கூட்டிச்செல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் போது நானும், என் மனைவி கார்த்திகா, என் மகள் திருக்குறழி ஆகியோர்கள் இருந்தோம். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போனில் நான் தான் அ.சா.1ஐ மருத்துவமனையில் சேர்த்தேனா என்று கேட்டார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

3. போலீசார் என்னை 02.09.2023ம் தேதி போனில் விசாரித்தார்கள். கம்பால் சுமார் ஒரு 7 அல்லது 8 அடி இருக்கும். ஆடு மேய்க்கும் கம்பு. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அ.சா.1 எனது பக்கத்து ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் மாடு எனது தோட்டத்தில் மேய்வதால் அ.சா.1க்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.